## திராவிட இயக்கத்தின் வரலாற்றை, தியாகத்தைத் தெரிந்து கொண்டு –

# நம் கொள்கைகளை - சாதனைகளைப் புரிந்துகொண்டு மேடைகளில் தெளிவாக முழங்குங்கள்!

## சென்னையில் 200 இளம் பேச்சாளர்களுக்கான 2 நாள் பயிற்சி முகாமை தொடங்கி வைத்து

## கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**சென்னை, பிப். 17 –**

**சென்னையில் 200 இளம் பேச்சாளர்களுக்கான இரண்டு நாள்கள் பயிற்சி முகாமை கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத்தலைவர் – முதலமைச்சர் அவர்கள் இட்ட கட்டளைகளில் முக்கியமானது, 100 இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து, தலைமையிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது. அதன்படி, தமிழ்நாடு முழுவதும் இளைஞரணி சார்பில் நடத்தப்பட்ட `என் உயிரினும் மேலான..!' பேச்சுப்போட்டியின் மூலம் 183 இளம் பேச்சாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.**

**அவர்கள் உட்பட 200 இளம் பேச்சாளர்களை, திராவிட இயக்கத்தின் அடுத்தத் தலைமுறைப் பேச்சாளர்களாக உருவாக்கும் முயற்சியில் நடத்தப்படும் இரண்டு நாள் பயிற்சி முகாம், சென்னை, அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில் கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து எழுச்சிமிகு உரையாற்றினார்.**

அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு:

இந்த முகாமில் பேச்சுக்கலை குறித்து நம் இளம்பேச்சாளர்களுக்கு திராவிட இயக்க பேச்சாளர்கள் - கழக முன்னணியினர் பயிற்சி அளித்து வருகின்றனர். இந்த இரண்டு நாள் பயிற்சி முகாமை முறையாக பயன்படுத்திக் கொண்டு, எட்டுத்திக்கும் கொள்கை முரசொலிக்க நம் இளம் பேச்சாளர்களை வாழ்த்தினோம்.

இளைஞர் அணி சார்பாக, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரண்டு நாள் பயிற்சி முகாம் மூலம், இளம் பேச்சாளர்களான உங்களை எல்லாம் மீண்டும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ்நாட்டின் மூலை முடுக்கிலிருந்து, குக்கிராமங்களில் இருந்து இங்கு வந்து சேர நீங்கள் எவ்வளவு பயிற்சி எடுத்துக் கொண்டீர்கள். எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறீர்கள் என்பது, எங்கள் அனைவருக்கும் தெரியும். மீண்டும் இங்கு சொல்லத் தேவையில்லை. இருந்தாலும், சிலவற்றை மட்டும் இங்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

### நூறு இளம் பேச்சாளர்கள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கழகத்தலைவர் அவர்கள் ஒவ்வொரு அணிக்கும், பல்வேறு பணிகளைக் கொடுத்தார். அதில் நம் இளைஞர் அணிக்கு இட்ட முக்கியமான பணி என்னவென்றால், `ஆற்றல்மிக்க நூறு இளம் பேச்சாளர்களைக் கழகத்துக்குத் தேர்ந்தெடுத்துத் தாருங்கள்' என்று சொன்னார்.

அதன்படி இந்த `என் உயிரினும் மேலான..!' பேச்சுப்போட்டியை அறிவித்தோம். தமிழ்நாடு முழுவதும் 17,000 பேர் விண்ணப்பித்திருந்தார்கள். அந்த 17 ஆயிரம் பேரில் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்போது இளம் பேச்சாளராக இந்த அரங்கத்திற்கு வந்து இருக்கிறீர்கள். உண்மையிலே, நீங்கள் ஒவ்வொருவரும் ஆயிரத்தில் ஒருவர்தான் என்று சொன்னால் மிகையாகாது.

இப்போது நாம் நடத்திய பேச்சுப்போட்டியைப் பார்த்து, பல்வேறு இயக்கங்கள் பேச்சுப்போட்டியை நடத்தத் துவங்கி இருக்கிறார்கள். நாம் நடத்தியதே தாமதம். நாமே தலைவர் சொல்லி, ஒரு வருடம் கழித்துத்தான் நடத்தி முடித்தோம். ஆனால், மற்ற இயக்கங்களும் நம்மைப் பார்த்து, அவர்கள் இப்போது நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள். பரவாயில்லை... மற்ற இயக்கங்களுக்கும் எப்போதும்போல முன்மாதிரிபோல் திராவிட முன்னேற்றக் கழகம் திகழ்கிறது. அதிலும் இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், நம் இளைஞர் அணி மற்ற இயக்கங்களுக்கு ஒரு முன்மாதிரியாக திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

17,000 போட்டியாளர்களில் இருந்து 182 இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து, அதில் சிறப்பாகப் பேசிய மூன்று பேச்சாளர்களுக்கு, இதே அரங்கத்தில் நம் கழகத் தலைவர் அவர்கள் பரிசுகளைக் கொடுத்தார். 182 பேச்சாளர்கள் மட்டுமல்லாது, மண்டல அளவில் நன்றாகப் பேசிய பேச்சாளர்களையும் தேர்வுசெய்து 200 க்கும் மேற்பட்ட இளம் பேச்சாளர்களை இங்கே சென்னைக்கு அழைத்து வந்திருக்கிறோம். இது ஒரு முதல் மற்றும் புது முயற்சி.

கழகத் தலைவர் அவர்கள் நம்மிடம் கேட்டது `100 இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து தாருங்கள்' என்பது. ஆனால், 200 க்கும் மேற்பட்ட இளம் பேச்சாளர்களைக் கழகத்துக்குத் தேர்ந்தெடுத்து கொடுத்திருக்கிறோம். இதற்காக உழைத்த அனைத்து நடுவர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், அன்பகத்தைச் சேர்ந்தவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள் அத்தனைப் பேருக்கும், உங்களுக்கும், உங்களின் பெற்றோர் அத்தனைப்பேருக்கும் முதலில் எனது நன்றிகளைச் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கல்லூரிகளில் மேடைப்பேச்சு!

உங்களில் பலபேர் பள்ளிகளில், கல்லூரிகளில் மேடைப்பேச்சு பேசியிருப்பீர்கள். ஆனால், பொதுக்கூட்ட மேடை அனுபவங்கள் இல்லாமல் இருந்திருக்கும். `என் உயிரினும் மேலான பேச்சுப்போட்டி'யில் கலந்துகொண்ட பிறகு, இடைப்பட்ட இந்த ஐந்து மாதங்களில் தமிழ்நாடு முழுவதும் பல ஊர்களில் பொதுக்கூட்ட மேடைகளில் பேசி இருப்பீர்கள். இப்போது உங்கள் அத்தனைப் பேருக்கும் பொதுக்கூட்ட மேடை அனுபவம் கிடைத்திருக்கும், என்று நான் நம்புகிறேன்.

நான் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் கட்சி நிகழ்ச்சிகளுக்குச் செல்லும்போது, அங்கிருக்கும் கட்சி நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகளை அழைத்து, மாவட்ட அமைப்பாளர்களை அழைத்து கேட்கின்ற ஒரே கேள்வி, நம் கழக இளம் பேச்சாளர்கள் இங்கு வந்து பேசினார்களா? அதற்கு ஏற்பாடு செய்தீர்களா? அவர்களுக்




கான போக்குவரத்துச் செலவு எல்லாம் சரியாக செய்யப்பட்டதா? அவர்களுக்கு தங்கும் வசதி சரியாகச் செய்யப்பட்டதா? எப்படிப் பேசினார்கள்? எவ்வளவு நேரம் பேசினார்கள்? அதை நம் கழகத்தினரும் பொதுமக்களும் ரசித்துக் கேட்கிறார்களா? என்பதுதான் எனது முதல் கேள்வியாக இருக்கும்.

அப்போது பலர் என்னிடம் சொன்னது அனுபவம் வாய்ந்த தலைமைக் கழகப் பேச்சாளர்களுக்கு நிகராக நம் இளம் பேச்சாளர்கள் பேசுகிறார்கள், நம் கழகத் தலைவர் சரியான நேரத்தில், சரியான முடிவை எடுத்து, இளைஞர் அணியிடம் அந்தப் பணியை ஒப்படைத்து இருக்கிறார். நீங்கள் சரியான 200 பேரைத் தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள் என்று பாராட்டினார்கள். அதைக் கேட்கும்போது உண்மையிலேயே எனக்கு மிகப்பெரிய அளவில் மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சி அத்தனைக்கும் நீங்கள்தான் காரணம். அது அத்தனையுமே உங்களைத்தான் சேரும். உங்களுக்கு என் நன்றி.

உங்களின் பேச்சாற்றலை மேலும் மேலும் பட்டைத் தீட்டத்தான் இந்த இரண்டுநாள் பயிற்சி முகாமை ஏற்பாடு செய்திருக்கிறோம். இது போன்ற பயிற்சிகள் பல்வேறு வடிவங்களில் நடைபெற்று வருகின்றன.. இனியும் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே சென்னை புத்தகக் காட்சியில் `முத்தமிழறிஞர் பதிப்பகம்' சார்பில், தினந்தோறும் வாசகர் சந்திப்பு ஏற்பாடு செய்திருந்தோம். அதில் தினந்தோறும் எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், பேச்சாளர்கள் என திராவிட இயக்க ஆளுமைகள் வருகை தந்து பேசினார்கள். அந்தச் சந்திப்பு நிகழ்ச்சிக்கு, இளம் பேச்சாளர்களாகிய உங்களையும் அழைத்திருந்தோம். நீங்களும் நிறைய பேர் வந்து கலந்துகொண்டீர்கள். அந்த நிகழ்ச்சி வாயிலாகவும் நிறைய கற்று இருப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

### சிறப்பாகப் பேசியிருந்தீர்கள்!

அதேபோல் பிப்ரவரி 3-ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவுநாளை முன்னிட்டு, ஒரு ஜூம் மீட்டிங் நடைபெற்றது. அதில் இரண்டு இளம் பேச்சாளர்கள், பேரறிஞர் அண்ணாவின் பணிகளைப் பற்றி மிகச் சிறப்பாகப் பேசினீர்கள். எனக்கு எப்படித் தெரியும் என்று யோசிக்கிறீர்கள். ஏனென்றால், நானும் அந்த மீட்டிங்கில் இருந்தேன். நான் வேறொரு நிகழ்ச்சியில் இருந்தேன், என்னால் முழுவதும் கவனிக்க முடியவில்லை. ஆனால், என்ன பேசுகிறார்கள், எப்படி அந்த நிகழ்ச்சி நடக்கிறது என்று, நானும் அந்த நிகழ்ச்சியில் ஓரமாக உட்கார்ந்து பார்த்துக்கொண்டு இருந்தேன். மிகவும் சிறப்பாகப் பேசியிருந்தீர்கள்.

அடுத்து கழகத்தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டும், அதேபோல் ஒரு இணையக் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடத்த திட்டமிட்டிருக்கிறோம். இப்படித் தொடர்ச்சியாகவே உங்களுக்கான பயிற்சி, பேசுவதற்கான களம் தொடர்ச்சியாக உங்களுக்கு அமைத்துத் தரப்படும்.

### திராவிட இயக்கத்தின் தலைவர்கள்!

நம் திராவிட இயக்கம், பேசிப்பேசி வளர்ந்த இயக்கம். எழுதி எழுதி வளர்ந்த இயக்கம். நம் கொள்கைகளைப் பட்டித்தொட்டி எங்கும் கொண்டு சேர்த்ததில் பேச்சுக்கலைக்கு மிகமிக முக்கியமான பங்கு உண்டு. இப்போது தொழில்நுட்பம் முன்புபோல் இல்லை. நிறைய வளர்ந்துவிட்டது. இப்போது நாம் தொழில்நுட்ப ரீதியாக எவ்வளவோ முன்னேறிவிட்டோம். இப்போது பேசுவதற்கு நிறைய வாய்ப்புகள் வந்து இருக்கின்றன. ஆனால் இப்படி எந்த வாய்ப்பும் இல்லாத காலத்தில் பேசிப் பேசி கொள்கைகளை வளர்த்தவர்கள், நம் திராவிட இயக்கத்தின் தலைவர்கள்.

தந்தை பெரியார் முதன்முதலில் பேச ஆரம்பித்தபோது, முறையான ஒரு ஒலிபெருக்கி வசதி கூட கிடையாது. இன்னும் சொல்லப்போனால் மின்சாரம் கூட கிடையாது. பெட்ரோமாக்ஸ் விளக்கை ஏற்றிவைத்து, அல்லது தீப்பந்தத்தைக் கொளுத்தி வைத்துத்தான் அன்றைக்கு தந்தை பெரியார் தொடர்ந்து பேசினார். இதுபோல், அன்றைக்குப் பிரமாண்ட மேடைகளும் கிடையாது.

இன்னும் சொல்லப்போனால், சுயமரியாதை இயக்கம் தொடங்கி, இன்றைக்கு நூறாவது ஆண்டில் இருக்கிறோம். தந்தை பெரியார் 1925-ஆம் ஆண்டு `சுயமரியாதை இயக்க'த்தைத் தொடங்கினார். அவர் தொடங்கியபோது அதில் முன்னணி தளபதியாக இருந்தவர் யார் என்றால், பட்டுக்கோட்டை அஞ்சாநெஞ்சன் அழகிரி அவர்கள். கொள்கை முழக்கம் தெறிக்கின்ற அழகிரி அவர்களின் பேச்சு, அன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் மிகவும் பிரபலமாக இருந்தது.



### பட்டுக்கோட்டை அழகிரிசாமி

கிராமப்புறங்களில் ஒருவர், தெருவில் தண்டோரா அடித்துக்கொண்டு, `இன்று மாலை திராவிடக் கழகப் பொதுக்கூட்டத்தில், பட்டுக்கோட்டை அழகிரி பேசுவார்' என்று ஒவ்வொரு தெருவாகக் கூவிக்கொண்டே போவாராம். மாலையில் அந்தப் பொதுக்கூட்டத்தில் பேசும் அழகிரி வேறு யாரும் கிடையாது. காலையில் யார் தண்டோரா அடித்து பொதுக்கூட்டத்தை விளம்பரப்படுத்தினாரோ, அவரேதான் மாலையில் பொதுக்கூட்டத்தில் பேசும் பட்டுக்கோட்டை அழகிரிசாமி. காசநோயால் கடுமையாக பாதிக்கப்பட்ட பட்டுகோட்டை அழகிரி அவர்களுக்கு ரத்தம் வந்துகொண்டே இருக்குமாம். அதோடு அவர் கத்தி, கத்திப் பேசுவார்.

ரத்தம் வந்தபோதும் பேச்சை நிறுத்தாமல், பழைய துணியைக் கொண்டு ரத்தத்தைத் துடைத்துக்கொண்டே பேசுவாராம். ஒருமுறை அவர், திருவாரூரில் பேசும்போது மயங்கி விழுந்துவிட்டார். அங்கு அவரின் பேச்சைக் கவனித்துக்கொண்டு இருந்த ஊர்மக்கள் தண்ணீர் தெளித்து அவரை எழுப்புகிறார்கள். அப்போது ஒரு 13 வயது சிறுவன் பட்டுக்கோட்டை அழகிரியிடம் சென்று, `இவ்வளவு கஷ்டப்பட்டு, நோய்வாய்ப்பட்டு, உங்களை நீங்களே துன்புறுத்திக் கொண்டு பேச வேண்டுமா ஐயா?' என்று அந்த 13 வயது சிறுவன் கேட்டானாம். அப்போது பட்டுக்கோட்டை அழகிரி என்ன சொன்னார் தெரியுமா? `தம்பி, எனக்கு உடம்பு சரியில்லைத்தான், நான் நோய்வாய்பட்டு இருக்கிறேன்தான் என்பது எல்லாம் உண்மைதான். ஆனால், என்னைவிட இந்தச் சமூகம் அதிகம் நோய்வாய்ப்பட்டிருக்கிறதே, அதைச் சரிசெய்ய வேண்டாமா? அது எனது கடமை இல்லையா?' என்று சொன்னாராம்.

### முதல் மகனுக்கு அழகிரியின் பெயர்!

அவர் யாரும் இல்லை. இங்கு படமாக வைத்து இருக்கிறோம், பாருங்கள் அவரைத்தான் பாடமாக வைத்து இருக்கிறோம். பட்டுக்கோட்டை அழகிரியிடம், அப்படிக் கேட்ட 13 வயது சிறுவன் யார் தெரியுமா, அவர்தான் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். அதனால்தான் கலைஞர் அவர்கள், அவரின் பேச்சால் ஈர்க்கப்பட்டு, அவரின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, அவரின் முதல் மகனுக்கு அழகிரி என்று அவரின் ஞாபகமாக பெயர் வைத்தார்.

அப்போதெல்லாம் நம் தலைவர்கள், இயக்க முன்னோடிகள் பொதுக்கூட்டங்களில் பேசும்போது, சாதியவாதிகள், மதவாதிகள் கூட்டத்தில் வன்முறைத் தாக்குதல்களில் ஈடுபடுவார்கள். கல்லடி, மலம், அழுகிய முட்டையை வீசுவது, செருப்புகளை வீசுவது, கூட்டத்தில் பாம்புகளை விடுவது என்று பலவகைகளிலும் தாக்குதல்களில் ஈடுபடுவார்கள். அதையெல்லாம் தாங்கிக் கொண்டுதான், திராவிட இயக்கம் இப்படி வளர்ந்திருக்கிறது.

1944-ல் தந்தை பெரியார் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசுவதற்காக கடலூர் மாவட்டத்திற்குச் செல்கிறார். பெரியார் ரிக்-ஷா வண்டியில் சென்றுகொண்டு இருக்கும்போது, சாலை ஓரத்தில் இருந்த ஒரு சிறுவன் பெரியாரின் மீது செருப்பை எடுத்து வீசுகிறான். வண்டி சிறிது தூரம் சென்ற பிறகு பெரியார், `வண்டியைத் திருப்பு' என்று சொல்கிறார். அந்தப் பெயனுக்கு ஒரே குழப்பம். ஏன் ஐயா கூட்டத்திற்குச் செல்லவில்லையா, ஏன் திருப்ப சொல்கிறீர்கள் என்று பெரியாரிடம் அந்தப் பையன் கேட்கிறார்.

### பெரியார் சொன்னார்!

அப்போது பெரியார் சொல்கிறார், `அவன் வீசிய செருப்பு, புதுச்செருப்பாக இருக்கிறது. ஒரு செருப்புதான் வீசி இருக்கிறான், ஒரு செருப்பை வைத்துக்கொண்டு என்னாலும் ஒன்றும் செய்ய முடியாது, அவனாலும் ஒன்றும் செய்ய முடியாது. நாம் திரும்பி சென்றோம் என்றால், நிச்சயம் இன்னொரு செருப்பையும் வீசுவான் அதை நாம் எடுத்து பயன்படுத்திக் கொள்ளலாம், என்று பெரியார் சொன்னார்.

செருப்பு வீசியவரின் மீது உங்களுக்குக் கோபம் வரவில்லையா என்று அந்த பையன் கேட்டான். `படித்தவனாக இருந்தால், அறிவிருந்தால் என் பேச்சுக்குப் பேச்சு, பதில் சொல்லிருப்பான் அவன். எழுதத் தெரிந்திருந்தால் ஒரு அறிக்கை வெளியிட்டு இருப்பான். ஆனால், இவன் எழுத, படிக்கத் தெரியாதவன். அதனால்தான் செருப்பு வீசுகிறான்' என்று சொல்லி, அவர் வந்த வழியிலேயே திரும்பிச் சென்றார். அவர் சொன்னதுபோல் இன்னொரு செருப்பும் வந்து சேர்ந்தது, பெரியார் இன்னொரு செருப்பையும் எடுத்து வைத்துக்கொண்டுதான் சென்றார்.

### பேரறிஞர் அண்ணாவின் பேச்சு!

1944-ல் கடலூரில், பெரியாரின் மீது செருப்பு வீசிய அதே இடத்தில் 1972-ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் பெரியாருக்குச் சிலை வைத்தார். இதுதான் தந்தை பெரியாரின் உறுதி. அவரின் மனபக்குவம். அந்த உறுதி, தைரியம் இங்கு இருக்கின்ற நம் அத்தனைப்பேருக்கும் இன்றைக்குத் தேவைப்படுகிறது. பேரறிஞர் அண்ணாவைப் பொறுத்தவரை அவரின் பேச்சு என்பது, எதிரே இருப்பவர்கள் ரசிக்கின்ற மாதிரி, ஏற்றுகொள்ளும்படி பேசுவார். அவரின் பேச்சு வேறுமாதிரி.

1945-ஆம் ஆண்டு புதுச்சேரியில் `திராவிடர் கழக மாநாடு' நடைபெற்றது. அப்போது எதிரிகள் புகுந்து வன்முறைத் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு நாடகத்தில் நடித்துவிட்டு, சாலையோரத்தில் வெளியே வரும்போது அங்கு இருக்கின்ற ரவுடிகள் எல்லாம் சேர்ந்து, அங்கு ஒரு சாக்கடையில் வீசிவிட்டு சென்றுவிட்டார்கள். ஒரு இஸ்லாமியப் பெண்மணிதான் கலைஞரைக் காப்பாற்றினார். தந்தை பெரியார் கண்கலங்கியபடி, கலைஞரின் காயங்களுக்கு மருந்து போட்டுவிட்டு, தந்தை பெரியார், கலைஞரை கையோடு ஈரோடுக்கு அழைத்துச் சென்றுவிட்டார்.

### திராவிட இயக்கத்தின் வரலாறு!

இப்படி பல வன்முறைத் தாக்குதல்களுக்கு ஆளாகி, நம் இயக்கத் தலைவர்கள், முன்னோடிகள் உழைத்ததால்தான் நாம் இப்போது சுதந்திரமாக கல்வி கற்கமுடிகிறது, வேலைவாய்ப்பைப் பெற முடிகிறது, நல்ல பதவிகளில் அமர முடிகிறது. அப்படிப்பட்ட பேச்சாளர்களான தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின், முத்தமிழறிஞர் கலைஞரின், இனமானப் பேராசிரியரின், மாவீரன் பட்டுக்கோட்டை அழகிரியின் வாரிசுகள்தான் இன்றைக்கு இங்கே கூடியிருக்கிற இளம் பேச்சாளர்களாகிய நீங்கள்.

அதனால்தான், நம் திராவிட இயக்கத்தின் வரலாற்றை, தியாகத்தைத் தெரிந்துகொண்டு நம் கொள்கைகளையும் சாதனைகளையும் புரிந்துகொண்டு நீங்கள் இன்னும் தெளிவாக, சத்தமாக மேடைகளில் பேசவேண்டும் என்பதுதான் எங்களின் ஒரே குறிக்கோள். நம் திராவிட இயக்கப் பேச்சாளர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாணி இருக்கும். அதனால்தான் பொதுக்கூட்டங்களை, `மாலை நேர பல்கலைக் கழகங்கள்' என்று அப்போது மக்கள் பொதுவாக பேசிக்கொள்வார்கள்.

இன்றைய பேச்சு என்பது மேடையில் மட்டும் முடிந்துவிடுவதில்லை. நம்முடைய பேச்சுக்கலையைப் பயன்படுத்திக்கொள்ள, நம் சாதனைகளையும் கொள்கைகளையும், வரலாற்றையும் சொல்ல ஏராளமான களங்கள், ஊடகங்கள் இருக்கின்றன. தொழில்நுட்ப வளர்ச்சி இல்லாத காலத்திலேயே ஆர்வம்கொண்டு அதையும் பயன்படுத்திக் கொண்டவர்கள்தான் நம் தலைவர் அவர்கள். அதேபோல் நாமும் இப்போது தொழில்நுட்பம் எந்த அளவிற்கு உயர்ந்து இருக்கிறதோ, தொழில்நுட்பம் எந்த அளவிற்குப் பெருகி இருக்கிறதோ அதையும் நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

### ஐ.பி.எம் கம்ப்யூட்டர்- 1620 மாடல்!

ஒரு உதாரணத்திற்கு, 1970-ஆம் ஆண்டு, அன்றைய கிண்டி பொறியியல் கல்லூரியில் நடந்த தமிழ் மன்ற விழாவில், தந்தை பெரியார் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டார். அங்கு சென்ற தந்தை பெரியாரிடம் கல்லூரிக்கு என புதிய கம்ப்யூட்டரை வாங்கி இருப்பதாக அங்கு இருக்கும் பேராசிரியர்கள் தெரிவித்தார்கள். அதைப் பார்க்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டார் பெரியார். அவரால் படியேறிச் செல்ல முடியாது. அங்கு இருக்கின்ற மாணவர்கள், பேராசிரியர்கள் எல்லாம் பெரியாரை 2 மாடிக்குத் தூக்கிச் சென்றார்கள். அங்கு சென்று அந்த கம்ப்யூட்டரைப் பார்த்தார் தந்தை பெரியார் அவர்கள். ஐ.பி.எம் கம்ப்யூட்டர்- 1620 மாடல் கம்ப்யூட்டர் அது. இப்போது இருப்பதைப் போல் சின்ன மடிக்கணினி அளவில் இருக்காது. கிட்டத்தட்ட ஒரு ரூம் அளவுக்கு இருக்கும்.

அந்த கம்ப்யூட்டரின் சிறப்பு என்னவென்றால் எந்த வருடம், எந்த தேதியைச் சொன்னாலும், அதன் கிழமையை மிகச் சரியாக அந்த கம்ப்யூட்டர் சொல்லி விடும் என்று அங்கு இருக்கின்ற பேராசிரியர்கள் சொன்னார்கள். பெரியார் தான் பிறந்த தேதியைச் சொல்லி, கம்ப்யூட்டர் சரியாக கிழமையைச் சொல்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்தார். அவ்வளவு தள்ளாத வயதிலும் அறிவியல், தொழில்நுட்பத்தில் சேர்ந்து கொள்ள அவருக்கு அவ்வளவு ஆர்வம் இருந்தது.

### சட்டைப்பையில் கம்பியில்லா சாதனம்

அதனால்தான் அவர் ஒரு புத்தகம் எழுதினார். இனிவரும் உலகம். அந்த நூலில் எதிர்காலத்தில் என்னவெல்லாம் நடக்கும் என்று அவர் எழுதினார். அவர் எழுதிய சில குறிப்புகள். எல்லோருடைய சட்டைப்பையிலும் கம்பியில்லா சாதனம் இருக்கும்', ஒருவர் மற்றவரின் முகத்தை ஒரு திரையில் பார்த்து பேசுவார்கள், ஆண் பெண் சேர்க்கையில்லாமல் குழந்தை பிறக்கும் என்று எழுதினார். எல்லோருடைய சட்டைப்பையிலும் கம்பியில்லா சாதனம் இருக்கும் என்பது அலைபேசி. ஒருவர் மற்றவரின் முகத்தை ஒரு திரையில் பார்த்து பேசுவார்கள் என்பது ஜூம் கால். ஆண் பெண் சேர்க்கையில்லாமல் குழந்தை பிறக்கும் டெஸ்ட் ட்யூப் பேபி. இதைப் பற்றியெல்லாம் பற்றி 1943 -ஆம் ஆண்டு பெரியார் எழுதி இருக்கிறார்.

இப்படித் தொலைநோக்குப் பார்வையுடன் அறிவியல் சிந்தனையுடன் இருப்பதால்தான் இன்றைக்கு வரைக்கும் நம் திராவிட இயக்கத்தை, யாராலும் அழிக்க முடியவில்லை. எவ்வளவு முயற்சித்தாலும் அவர்கள் தோற்றுப் போய்க்கொண்டு இருக்கிறார்கள்.

தன்னால் பேசமுடியாத, எழுத முடியாத காலத்திலும் ஃபேஸ்புக், ட்விட்டரில் அக்கவுண்ட் ஆரம்பித்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அன்றைய காலத்தில் ஃபேஸ்புக், ட்விட்டரில் அக்கவுண்ட் ஆரம்பித்த முதல் அரசியல் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான்.

### ஆணித்தரமாக எழுத வேண்டும்!

அதேபோல் இன்றைக்கு இளம் பேச்சாளர்களான நீங்களும் யூட்யூப் சேனல் ஆரம்பித்து இயக்கத்தின் கருத்துகளைப் பேச வேண்டும். இன்ஸ்டா ரீல்சில் பாட்டுப் பாடுவது, நடனம் ஆடுவது எல்லாம் இல்லாமல் இயக்கத்தின் வரலாற்றைப்பற்றி பேசலாம், தலைவரின் சாதனைகளைப் பற்றி பேசலாம், அரசின் திட்டங்கள் முதலமைச்சரின் சாதனைகள் பற்றி பேசலாம். தொலைக்காட்சி விவாதங்களில் கலந்து கொண்டு நம் கருத்துகளை எடுத்துரைக்கலாம். ஃபேஸ் புக், ட்விட்டரில் நம் கருத்துகளை ஆணித்தரமாக எழுத வேண்டும். இந்த விஷயங்களை எல்லாம், நீங்கள் சிறப்பாக செய்ய வேண்டும் என்றுதான் இந்த இரண்டுநாள் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உங்கள் பேச்சுக்கலையை வளர்த்துக் கொள்ள உதவிட, இந்த இரண்டு நாட்களும் மிக மிக முக்கியமான பேச்சாளர்கள், சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் உங்களிடம் பேச இருக்கிறார்கள். அவர்களின் கருத்துகளை நீங்கள் உள்வாங்கி கொள்ளுங்கள். ஒன்றும் அவசரம் இல்லை இரண்டு நாட்கள் இருக்கின்றன. மிகவும் ஓய்வாக இருங்கள். அதற்காக மிகவும் ஓய்வாக வேண்டாம். கவனமாக கேளுங்கள், கூர்ந்து கேளுங்கள்.

### உங்கள் சந்தேகங்களைக் கேட்கலாம்!

எந்தவிதமான சந்தேகமாக இருந்தாலும், கைகளை உயர்த்தினீர்கள் என்றால், உங்களுக்கு ஒலிப்பெருக்கி தரப்படும். உங்களிடத்தில் நோட் பேடு கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதில் குறிப்புகளை எழுதிகொண்டு கடைசியில், உங்களுக்கு எந்த சந்தேகமாக இருந்தாலும் கேளுங்கள். அது வரலாறு பற்றிதாக இருந்தாலும் சரி, நம் சாதனைகளைப்பற்றி இருந்தாலும் சரி, நம் மீது வைக்கப்படுகின்ற பொய் பிரச்சாரமாக இருந்தாலும் சரி, அதைக் குறிப்பு எடுத்துக்கொண்டு எந்த நேரத்திலும் உங்கள் சந்தேகங்களைக் கேட்கலாம்.

நிச்சயம் இந்த இரண்டுநாள் பயிற்சி முகாம் உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தப் பயிற்சி இன்னும் அடுத்தடுத்த கட்டத்துக்குத் செல்லவேண்டும். ஏன்றகனவே, தலைவர் எங்களுக்கு சொல்லி இருக்கிறார் இளைஞர் அணி ஒரு வருடம் நடத்தி விட்டீர்கள் அடுத்த வருடமும் நீங்கள் பேச்சுப் போட்டி நடத்தியாக வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்.

எப்படி பேச்சுப்போட்டியை நடத்தப் போகிறோமோ, அதேபோல் இந்தப் பயிற்சிகளையும் ஒவ்வொரு வருடமும், ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்துவதற்கு, நாங்கள் முனைப்பைக் காட்டிக்கொண்டு இருக்கிறோம். எனவே, வந்திருக்கின்ற உங்கள் அத்தனைப்பேருக்கும் மீண்டும் வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இளைஞர் அணிச் செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

இதில் இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் எஸ்.ஜோயல், இன்பா ரகு, இளையராஜா, அப்துல் மாலிக், நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ், பிரபு கஜேந்திரன், சீனிவாசன், ஜி.பி.ராஜா, ஆனந்தகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரப்பன், எபினேசர், பிரபாகர்ராஜா மற்றும் கோவி.லெனின், டான் அசோக், சூர்யா கிருஷ்ணமூர்த்தி, தொகுப்பாளர் சுமையா, மாவட்ட, மாநகர இளைஞர் அணி, அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளம்பேச்சாளர்கள் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.